# R 5805 Proper Mortification of the Body
# சரீரத்தை சரியானபடி அழித்தல்

*"மாம்சத்தின்படி பிழைத்தால் சாவீர்கள்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்." ரோமர் 8:13*

அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகளை கர்த்தருடைய பிள்ளைகள் அநேகந்தரம் படித்திருப்பார்கள். அவருடைய உண்மையான பரிசுத்தவான்கள் இவைகளின் கருத்தை பலதடவை நன்கு யோசித்திருப்பார்கள். பரிசுத்தம் குறைவுபடுகிறவர்கள், அநேக தடவை அவைகளைப் படித்து தங்களுக்கு அதை எடுத்துக்கொள்பவதற்கு பதிலாக உலகப்பிரகாரமான அண்டை வீட்டாருக்கு பொருத்திப்பார்த்திருக்கிறவர்கள், அந்த வசனத்தின் பாடத்தின் அழுத்தத்தை தாங்கள் பெறாதபடி அதை இழக்கிறார்கள். ஆனால் தேவனுடைய பரிசுத்த ஜனங்களுக்கு தீர்க்கதரிசி மாம்சீக இஸ்ரயேலருக்கு அறிவித்தது போல் "கற்பனையின் மேல் கற்பனையும் பிரமாணத்தின் மேல் பிரமாணமும், இங்கே கொஞ்சமும், அங்கே கொஞ்சமும்" தேவைப்படுகிறது. (ஏசாயா 28:10,13) நமது எளிய மட்பாண்டங்கள் மெல்லியதாகவும் ஒழுகக்கூடியதாகவும் இருப்பதால் அதற்கு சத்தியம் மற்றும் ஜீவனின் மகா ஊற்றிலிருந்து தொடர்ச்சியான ஈடுகட்டுதல் தேவைப்படுகிறது.

ஆகையால் கர்த்தரின் ஊழியக்காரரின் இந்த கிருபையான வார்த்தைகளை மறுபடியும் நாம் சிந்தித்து அதன் பாடத்தை நமது உள்ளங்களில் அதிகமாக பதிய வைப்போமாக, இங்கே பரிசுத்த பவுல் இதை கிறிஸ்துவின் சபைக்கே தெரிவிக்கிறார். அதை உலகத்திற்கு தெரிவிக்கவில்லை. மாம்சீக சுபாவத்தையும், பூமிக்குரிய காரியங்களையும் பலியாக ஒப்புக்கொடுக்க சபையானது தேவனுடனான ஒரு உடன்படிக்கைக்குள்ளாக முறையாக நுழைந்திருக்கிறது. நமது பூமிக்குரிய வாழக்கைளையும் நம்பிக்கை மற்றும் எதிர்கால பலன்களையும் ஒப்புக்கொடுப்பதில் உண்மையாக வெற்றிக்கொண்டால், நாம் பிழைப்போம் என்று அப்போஸ்தலர் இங்கு உறுதியளிக்கிறார், இதைச் செய்யும்படி நமது கிறிஸ்துவ மார்க்கத்தின் ஆரம்பத்தில் வெறும் உடன்படிக்கை செய்யாமல் நமது சரீரத்தின் அழிவை – நமது சரீரத்தின் செயல்களை அழிப்பதை முடிவுபரியந்தமும் நாம் நிறைவேற்ற வேண்டும்.

சரீரத்தின் செய்கைகள் என்பது, நமது பாவ சுபாவத்தையும், நமது விழுந்துபோன அபூரணங்களையும், பலவீனங்களையும் மாத்திரமல்ல, நமது அனைத்து மானிட ஆசைகளையும் குறிக்கிறது. அவைகளை நாம் நிச்சயமாக அழிக்க வேண்டும். முடிந்தவரை நாம் இவைகளை உடனே குன்றச்செய்யவேண்டும். பரம ஓட்டத்திற்கு எந்த அளவிலும் நமக்கு தடையாக இருக்கக்கூடியவைகளை, நமக்கு முன் வைத்திருக்கிற மகிமையான நம்பிக்கையை அடைவதை தடுக்கக்கூடியவைகளை, **அவைகள் பாவமான காரியமாக இல்லாதிருந்தாலும்,** அந்த பூமிக்குரிய ஆசைகளை பலிகொடுக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். நாம் அனைவரும் இதை அனுதினமும் செய்கிறோமா? நாம் மற்றவர்களுடன் கலந்து உலகத்தோடும் அதன் செல்வாக்குகளோடும் தொடர்பு கொள்வதாலும் வாழ்க்கைக்குரிய காரியங்களிலும் ஈடுபடுவதாலும் நாம் தொடர்ந்து மாம்சத்தின் கிரியைகளை அழிக்கிறோமா? மாம்சத்தை சிலுவையில் அறைந்து கொண்டிருக்கிறோமா? பூமிக்குரிய காரியங்களுக்கு நாம் அனுதினமும் மரித்துக் கொண்டிருக்கிறோமா? நாம் ஒவ்வொரு நாளும் மென்மேலும் புது சிருஷ்டியாக வாழ்கிறோமா?

## மாம்சத்தை தகாதவிதமாக அழித்தல்

நாம் மாம்சத்தின் கிரியைகளை அழிக்க ஒவ்வொரு நாளும் சந்தர்ப்பங்களை காண வேண்டும். நாம் புது சிருஷ்டிகளாக வாழ்வோமானால், வளர்வோமானால் நாம் இதைச் செய்ய வேண்டும். சரீரத்தை சரியானபடி அழிப்பதாக உலகில் அநேகர் மிகவும் தவறான கருத்துகளை வைத்திருக்கிறார்கள். நமது கத்தோலிக்க நண்பர்கள் சிலர் மாம்சத்தை அழிப்பதாக கருதி தங்களது ஆர்வத்தில் ஒரு தவறு செய்கின்றனர். உதாரணத்திற்கு அநேகர் மெத்தையில் படுப்பதற்கு பதிலாக ஒரு கல் தரையில் படுக்கிறார்கள். சிலர் கீழே படுத்துக்கொண்டு மற்றவர்கள் தங்கள் மேல் நடக்கவும் அவர்களது கால்களை துடைத்துக்கொள்ளவும் அனுமதித்து ஒரு பாயைப்போல ஆக்கிக்கொள்ளுகிறார்கள். சிலர் காயம் ஏற்படும் வரை தங்களது உடலை சாட்டையால் அடித்துக்கொண்டு அதன் மேல் கம்பளி ஆடையை அணிந்து கொள்வார்கள். அவர்கள் மனதிலே குறிப்பிட்ட பாவங்கள் இருப்பதினால் அவர்கள் குற்ற உணர்வுகளை பெற்று அதற்கு பிராயச்சித்தம் செய்ய வேண்டும் என்று நினைக்கிறார்கள். மற்றவர்களுக்கு இந்த பிராயச்சித்தம் தன்னிச்சையானது அல்ல. ஆனால் அவர்களுக்கு மேல் அதிகாரத்தில் உள்ளவர்களுக்கு இது கட்டாயமானதாக இருக்கிறது. இந்த தனிப்பட்டவர்களுக்கு கஷ்டம் என்னவென்றால் அவர்களது தலைமையானவர்கள் தவறானவர்களாக இருப்பதுதான். அவர்கள் தெளிந்த புத்தியுள்ள ஆவியில் குறைவுபடுகிறார்கள். அது சரியென்று அவர்கள் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் தவறாக போதிக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களது மனசாட்சி

தவறாக வழிநடத்தப்பட்டு தவறாக பயிற்றுவிக்கப்பட்டிருக்கிறது.

புறஜாதிகள் கூட இப்படிப்பட்ட சரீரத்தை அழிப்பதை அப்பியாசப்படுத்துகிறார்கள். மிகுந்த வைராக்கியமுள்ள சிலர் தங்கள் கைகளை மணிக்கணக்காக பிடித்துக் கொண்டிருப்பார்கள், அல்லது வேல், கத்தி போன்றவைகளின் மேல் தங்கள் சரீரத்தை அழிக்கும்படியாக உட்கார்ந்திருப்பார்கள் அல்லது படுத்திருப்பார்கள். சிலர் பெட்டி போன்றவற்றில் குறுக்கி அமர்ந்து வருடக்கணக்காக சிறைப்படுத்திக்கொண்டு, துவாரத்தின் மூலமாக உணவை எடுத்துக்கொள்வார்கள். தாங்கள் பரிசுத்தமானவர்கள் என்று காண்பித்துக் கொள்ள இதைச் செய்கிறார்கள். இப்படியாக தெய்வத்தை தாங்கள் தணிக்க முடியும் என்று நினைக்கிறார்கள் அல்லது இப்படியாக தங்களது தனித்தன்மையையும் உணர்வுகளையும் இழந்து தெய்வத்தால் கிரகித்துக்கொள்ளப்படுவோம் என்று நினைக்கிறார்கள். இப்படியாக நிர்வாணம் – அல்லது மோட்ச நிலையை அடைவோம் என்று நினைக்கிறார்கள். அவர்கள் தங்கள் தெய்வத்தை சந்தோஷப்படுத்துவோம் என்று நினைக்கிறார்கள். ஆனால் உண்மையான தேவன் இப்படிப்பட்ட துன்பங்களிலும், கொடுமைகளிலும் சந்தோஷப்படுவதில்லை. அவர் இப்படிப்பட்ட குணமுடைய தேவனல்ல. தம்முடைய பிள்ளைகள் வேல், கத்தி போன்றவைகளில் படுத்திருப்பதிலும், இப்படிப்பட்ட வேறு எந்த அறிவீனமான காரியங்களை செய்வதிலும் சந்தோஷப்படுகிற தேவன் எப்படிப்பட்டவராயிருப்பார்? இப்படிப்பட்டவர் வேதாகமம் கூறுகிற தேவனல்ல. இப்படிப்பட்ட மனச்சார்பு ஒரு பேய்க்கு மட்டுமே உடையதாக இருக்கிறது. இப்படிப்பட்ட காரியங்கள் பேய்களால் மட்டுமே ஏவப்படுகின்றன அல்லது இப்படிப்பட்டவைகள் படிப்பறிவு இல்லாதவர்களால் மனவளர்ச்சி இல்லாதவர்களால், மூளைவளர்ச்சியில்லாதவர்களால் செய்யப்படுபவைகள்.

## ஒரு நோக்கத்திற்காக சுயக்கட்டுப்பாடு

வேதாகமத்தின் தேவன் இப்பொழுது முடிகிற யுகத்தில் இந்த உலகத்திலிருந்து ஒரு விசேஷித்த வகுப்பாரை அழைக்கிறார். இந்த தேவன் பேரில் நாங்கள் நம்பிக்கை வைக்கிறோம். ஏனென்றால் அவரது வசனத்தின் போதனைகள் நியாயத்திற்குட்பட்டவைகளாக இருக்கின்றன, இந்த போதனைகளை பின்பற்றுவதினால் வரும் பலன்கள் எல்லாவகையிலும் அதிக திருப்தியானதாகவும் சந்தோஷப்படுத்துகிறதாகவும் இருக்கின்றன. அதன் தீர்க்கதரிசன அதிசயதக்க நிறைவேறுதல்கள் அக்காலத்திலும், இக்காலத்திலும் மிகவும் திருப்தியளிக்கக்கூடிய வகையில் இருக்கின்றன. அதேபோல தேவனுக்கு ஊழியம் செய்கிறவர்களின் வாழ்க்கையில் அவரது கிருபையும் வழிநடத்துதலின் வெளிப்பாடுகளும் மிகவும் பலமாக இருக்கின்றன, அவர் இவர்களுக்கு ''மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்கள்'' கொடுத்திருக்கிறார். இவைகள் தற்காலத்திற்கும் வருங்காலத்திற்குமான ஜீவனுக்கு சம்பந்தப்பட்டதாக இருக்கிறது, இது பரம நகரத்திற்கு கண்ணீரின் பள்ளத்தாக்கு வழியாக பிரயாணிக்கிற தேவனுடைய பிள்ளைகளை நிலைநிறுத்தி பலப்படுத்துகிறது. இந்த நகரத்தை "தேவன் தாமே கட்டி உண்டாக்குபவர்."

தற்கால அனுகூலமற்ற நிலைமைகளிலும் சுற்றுச் சூழ்நிலைகளிலும் தேவனுக்கு விசுவாசமுள்ளவராகவும் சத்தியம் மற்றும் நீதியின் கொள்கைகளுக்கும் உண்மையுள்ளவராகவும் அவருடன் நாம் செய்துகொண்ட உடன்படிக்கைக்கும் உண்மையுள்ளவர்களாகவும் இருந்தால் நாம் நமக்கே விரோதமாகவும், நமது அழியக்கூடிய சரீரங்களை சூழ்ந்திருக்கும் பாவத்திற்கும் விரோதமாக இருப்போம் என்று பரிசுத்த வசனம் நமக்கு உறுதி அளிக்கிறது. இப்படி அவருக்கு உண்மையுள்ளவர்களாயிருத்தல் நமக்கு துன்பத்தையும் தவறாக புரிந்து கொள்ளுதலையும் கொண்டுவரும். ஏனெனில் தற்போது மனுக்குலத்தின் உலகத்தை இருளான நிலைமை சூழந்திருக்கிறது என்றும் அவர் நமக்கு கூறுகிறார். நாம் கர்த்தருக்கும் அவரது சத்தியத்திற்கும் ஊழியம் செய்வதற்கான நமது உண்மையான முயற்சி, உலகத்திலிருந்தும் நமது சொந்த மாம்சத்திலிருந்தும் மகா சத்துரு மற்றும் அவனது அனைத்து இருளான சேனைகளிலிருந்தும் எதிர்ப்பை கொண்டு வரும் என்பதை நாம் அறிவோம். ஏனெனில் இவைகளெல்லாம், நமது இரட்சகரும் நமது தலைவரும் நமது மாதிரியானவருமான கிறிஸ்துவின் சீடர்களாகிய நமக்கு விரோதமாக கூட்டங் கூடியிருக்கிறார்கள்.

நாம் நமது சரீரத்தின் செய்கைகளை அழிக்க வேண்டும், ஆனால் எந்த நோக்கமுமில்லாமல் நமது சரீரத்தை அழிக்கக்கூடாது. இப்படிச் செய்வதில் ஒரு காரணம், ஒரு வேதாகம காரணம் இருக்க வேண்டும். அழிக்கும் நமது அனைத்து வேலைகளிலும் நமக்கு முன்பாக ஒரு தகுதியான, ஒரு சரியான நோக்கம் இருக்க வேண்டும். நாம் வெளியில் சென்று உடனே சில விஷமுள்ள அமிலத்தை குடித்துவிட்டு தற்கொலை செய்துகொண்டு "நான் இப்போது எனது சரீரத்தை அழித்துக்கொண்டுள்ளேன்" என்று கூறலாமா? நம்மை நாமே வருத்திக் கொண்டு பாவத்தையோ அல்லது பலவீனத்தையோ இதன்மூலம் சரி பண்ணலாம் என்று நினைக்கலாமா? மிகவும் வக்கிரமான சிந்தையும் மனசாட்சியுமே இப்படிப்பட்ட கொடூரமான காரியத்தை வரவேற்கும். எப்படிப்பட்ட அழிவை தேவனுடைய பிள்ளை அப்பியாசப்படுத்தினாலும், அது தேவனுடைய ஆவியால், தேவனுடைய

சிந்தையில் தூண்டப்பட்டதாக இருக்க வேண்டும். “ஆவியினால் சரீரத்தின் செய்கைகளை அழித்தால் பிழைப்பீர்கள்.”

தற்காலத்தில் அழித்தல் என்ற வார்த்தைக்கு உலகம் கூறுகிற பொருளுக்கு அப்போஸ்தலர் பயன்படுத்துகிற பொருள் முற்றிலும் வேறானதாக இருக்கிறது. நாம் ஒரு குறிப்பிட்ட அனுபவத்தைப் பற்றிக் கூறும்போது, “நான் ஒரு இழிவை அடைந்தேன்” என்று அவமானத்தை, தர்மசங்கடமான நிலையை அடைந்ததை கூறுவோம். ஆனால் அது சரீரத்தின் செய்கைகளை குறிப்பதில்லை. நாம் அழிக்க வேண்டும் என்பது மாம்சத்தின் செய்கைகளை இறக்கச் செய்தல் என்பதாகும். இதுதான் இந்த வார்த்தைக்கு பிரதானமான பொருள்.

நாம் அனுதினமும் ஆவியின் கனிகளாகிய சகித்தல், சாந்தம், தயவு, பொறுமை, இச்சையடக்கம், நீடிய பொறுமை, சகோதர அன்பு ஆகியவைகளில் நாம் வளர அனுதினமும் முயற்சி செய்து கொண்டிருக்கிறோம். இந்த குணலட்சணங்களை நாம் அப்பியாசப்படுத்த முயற்சிக்கும்போது இந்த ஆசீர்வாதத்தின் கனிகளை நமது இருதயத்திலும், வாழ்க்கையிலும் உயர்த்தும்பொழுதும் அழித்தலானது, சரீரத்தின் கொள்கைகளை கொல்லுதலானது நிறைவேற்றப்படுகிறது. ஏனெனில் நம்மை சுற்றியுள்ள எல்லா நிலைமைகளும் நமக்கு விரோதமாவே இருக்கிறது. நிலைமைகள் நமக்கு சாதகமாக இருந்தால், நம்மை சுற்றியுள்ள ஒவ்வொருவரும் நம்மை நல்லவிதமாக உற்சாகப்படுத்தி நமது ஓட்டத்தை மெச்சினால் நமது மாம்சத்தின் அழிவானது அவ்வளவு நன்றாக இருக்காது. விரோதமான செல்வாக்குக்கு எதிராக போராடுவதில் எதிர்ப்பை சந்திப்பதிலும் நமக்கு மேலேயுள்ள சக்தியை மேற்கொண்டு புதுசிருஷ்டியாக கிறிஸ்துவுக்குள் அபிவிருத்தியடைந்து பலம் பெறுவோம். ஆயிரவருட யுகத்தில் மாம்சத்தை அழிப்பது இருக்காது. ஆனால் இப்பொழுது இருக்கிறது. மாம்சத்தின் செய்கைகளை அழிப்பது, மாம்சத்தின் பூமிக்குரிய அதன் இயல்புகளை சிலுவையில் அறைவது ஆகிவைகளை விடா முயற்சியுடன் செய்தால், சுவிசேஷ யுகத்தில் ஜெயங்கொள்ளுகிற பரிசுத்தவான்களுக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட கனம், மகிமை, சாகாமையாகிய நித்திய ஜீவனைக் கொண்டுவரும். வேறு ஏதாவது மார்க்கத்தை நாம் எடுத்தோமானால், இந்த யுகத்தில் கொடுப்பதாக வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுப்பொருளை நாம் பெற மாட்டோம்.

## சபைக்கு இரண்டாவது
## பயிற்சிக்காலம் இல்லை

தலைப்பு வசனம் சொல்லப்பட்டவர்களுக்கு இரண்டாவது பயிற்சிகாலம் கொடுக்கப்பட்டதாக அதில் எந்தவித அறிவிப்பும் இல்லை. ஜீவனுக்காக இந்த வாழ்வில் சோதிக்கப்படுகிறவர்களுக்கே இந்த வசனம் சொல்லப்பட்டது. நீங்கள் மாம்சத்தின்படி நடந்தால் இப்போது வைக்கப்பட்டுள்ள பரிசை இழந்துவிடுவீர்கள். ஆனால் பிறகு இன்னொரு சோதனை உங்களுக்கு உண்டு என்று அப்போஸ்தலர் கூறவில்லை. நீங்கள் மாம்சத்தின்படி நடந்தால், நீங்கள் நித்திய வேதனையில் துன்பப்படுவீர்கள் என்றும் அப்போஸ்தலர் கூறவில்லை. அவரது வசனங்கள் தற்கால ஒரு பயிற்சி காலத்தையும் ஜீவனா அல்லது மரணமா என்ற பிரச்சனையைக் குறித்தும், நித்திய பேரின்பத்திலும் சமாதானத்திலும் ஜீவிப்பதா அல்லது நித்திய அழிவா என்பது குறித்துமே பேசுகின்றன, கிறிஸ்துவின் பாவநிவாரண இரத்தத்தில் விசுவாசத்தை அப்பியாசப்படுத்தி இரட்சிப்பை பெறுவதற்கான நிபந்தனை களைப் பற்றி இங்கே அப்போஸ்தலர் விவாதிக்கவில்லை. அவையெல்லாம் கொடுக்கப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. அவர் இங்கே நாம் எதை விசுவாசிக்க வேண்டும் என்பதையல்ல, நாம் எப்படி வாழ வேண்டும் என்பதைப் பற்றி மட்டுமே பேசுகிறார்.

இதனால் நாம், எதை நாம் விசுவாசிக்கிறோம் என்பது முக்கியமல்ல, இதுவரை நாம் நல்ல விதமாக வாழ்ந்தோமா என்பதுதான் முக்கியம் என்று பலர் எடுத்துக்கொள்வது போல நாமும் முடிவுக்கு வரலாமா? எந்தவிதத்திலும் அல்ல. அப்போஸ்தலரின் இந்த வார்த்தைகளை இப்படிப்பட்ட கருத்தில் எடுத்துக் கொள்பவர்கள் அவரது போதனைகளை மேலெழுந்த வாரியாக எடுத்துக் கொண்டு அதன் உண்மைப் பொருளை விட்டுவிடுவார்கள். இந்த வார்த்தைகள் எந்தவிதத்திலும் உலகினருக்கு சொல்லப்படாமல் கிறிஸ்துவின் விசுவாசத்தை முன்னரே அப்பியாசப்படுத்துகிறவர்களுக்கே சொல்லப்பட்டது என்பதை கவனித்து, இதன் உண்மையான பொருளை சரியானபடி புரிந்து கொள்ளலாம். கவனமில்லாத கிறிஸ்தவர்கள் இந்த எச்சரிக்கை எல்லாருக்குமானது என்று கருதி, தங்களுக்கான அதன் முக்கியத்துவத்தை இழக்க அனுமதிக்கிறார்கள். இது அப்போஸ்தலரின் நோக்கத்திற்கு மிகவும் எதிர்மாறானதாக இருக்கிறது. அப்போஸ்தலர், புதிய சுபாவத்திற்கு, தெய்வீக சுபாவத்திற்கு தேவனுடைய பரிசுத்த ஆவியினால் ஜெனிப்பிக்கப்பட்டவர்களாகிய கிறிஸ்து இயேசுவுக்குள் அர்ப்பணம் செய்த பரிசுத்தவான்களிடத்தில் பேசுகிறார். ஆகையால்தான் இங்கே அப்போஸ்தலர் மீட்கும் பொருளைப் பற்றியோ ஆயிர வருட யுகத்தில் உலகத்தினருக்கான சோதனையை பற்றியோ இங்கே பேசவில்லை. இங்கே சொல்லப்பட்டது இப்பொழுது சோதனையை பெறுகிறவர்களுக்கே ஆகும். உலகம் நியாயத்தீர்ப்புக்கு வரும் முன்னரே இவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள்.

ஆகையால் அப்போஸ்தலரின் எச்சரிக்கை உலகத்திற்கு பொருந்தாமல், சபைக்கே முழுவதுமாக பொருந்துவதாக இருக்கிறது. தங்களது சரீரத்தை பரிசுத்தமும் தேவனுக்கு பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுத்து, இனிமேல் ஆவியின்படி வாழ்ந்து மேலானவைகளை தேடும்படியாக தேவனுடன் புனிதமான உடன்படிக்கையை செய்தவர்களாகிய இவர்கள் அந்த உடன்படிக்கையை செல்லாததாக்கவோ அல்லது அசட்டை பண்ணவோ உரிமையில்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கொடுத்துவிட்ட மாம்சீக சுபாவத்தை மறுபடியும் அவர்கள் திரும்ப எடுத்துக்கொள்ள முடியாது. ஏனெனில் அவர்கள் அனைத்து உரிமைகளையும், அந்தஸ்துகளையும் விட்டுவிட்டார்கள். தேவனோடு செய்த உடன்படிக்கையை அசட்டை செய்தோ அல்லது வெறுத்தோ அதை ஒதுக்க முயற்சி செய்தால் மரணபரியந்தம் நமது பலியின் உடன்படிக்கைக்கு உண்மையாக இருப்பதினால் மட்டுமே அடையக்கூடிய ஆவிக்குரிய சுபாவத்தையும், பரிசையும், உரிமைகளையும் அவர்கள் இழந்துவிடுவார்கள்.

ஆகையால் அர்ப்பணம் செய்த விசுவாசிகளாகிய நாம் மாம்சீக வாழ்க்கைக்கு மறுபடியும் திரும்பினால் நாம் மரிப்போம் என்பது அப்போஸ்தலர் அறிவிக்காமல் இருந்தாலும் நியாயமாக அது வெளிப்படுத்தப்படுகிறது. அதாவது மாம்சீக பிரகாரமான சிந்தையில் நாம் இருந்தால் மரணம். ஆவிக்குரிய சிந்தையில் இருந்தால் ஜீவனும் சமாதானமும் இருக்கும். இதே கருத்திலே நமது ஆண்டவரின் வசனங்கள் இருக்கின்றன. “(என் சீஷரில்) தன் ஜீவனை இரட்சிக்க விரும்புகிறவன் அதை இழந்து போவான். என்னிமித்தமாகத் தன் ஜீவனை இழந்து போகிறவன் அதைக் கண்டடைவான்.” (மத்தேயு 16:24,25)

## மாம்சத்தின் கிரியைகள்

பிறகு, ஒரு முக்கியமான கேள்வி எழுகிறது. மாம்சத்தின்படி வாழ்வது என்றால் என்ன? நமது பதிலாவது: மனித மனம் மற்றும் மனித சரீரத்தின் நியாயமான தேவைகளை மாத்திரம் திருப்தி செய்யும்படி வாழ்வது, இப்படி திருப்திப்படுத்துதல் நாம் இடுக்கமான பாதையில் முன்னேறுவதை தடுக்கக்கூடியதாகவும் நாம் புது சிருஷ்டியாக முன்னேறுவதற்காகவும் அல்லது நமது சகோதரர்களுக்காக ஜீவனை கொடுப்பதற்காகவும் உள்ள நேரத்தை எடுத்துக்கொள்ள கூடியதாகவும் இருக்கிறது. இது சொல்வதற்கு மிகவும் சுலபமான காரியமாக இருக்கிறது. நாம் மாம்சத்தை சிலுவையிலறையவோ, சரீரத்தின் கிரியைகளை அழிக்கவோ முயற்சி செய்வதை நாம் விட்டுவிடுவோமேயானால், நாம் நம்மை மாம்சத்தின் இயற்கையான விருப்பங்களுக்கு அக்கறையின்றி விட்டுவிடுகிறவர்களாவோம். உடனே நாம் கீழே இறங்க ஆரம்பிப்போம். அந்த பாதையில் அதிகமாக தடைகளையும் கஷ்டங்களையும் காண்போம். மேலும் அந்த பாதை மென்மேலும் வழுக்கக்கூடியதாக இருக்கும். இழந்த இடத்தை திரும்ப பெற நாம் கஷ்டப்பட்டு ஜெபத்துடன் முயற்சி செய்யாவிட்டால், நாம் தொடர்ந்து கீழே இறங்குகிறவர்களாக இருந்து முடிவில் மரணத்திற்கு செல்வோம்.

பரிசுத்த பவுல் மாம்சத்தின் கிரியைகளை இப்படியாக வரையறை செய்கிறார். “மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபச்சாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம், விக்கிரகாராதனை, பில்லி சூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்க பேதங்கள், பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே.” (கலாத்தியர் 5:19-21) ஒழுக்க நெறிமுறைகளில் எப்படிப்பட்ட அழுக்குகளையும் மாசுகளையும் இது விளக்குகிறது! ஆனால் இப்படிப்பட்டவை விழுந்துபோன மனித சுபாவமாக இருக்கிறது. இந்த சில கெடுதலான களைகள் செழித்து வளர்ந்து மிச்சம் மீதி இருக்கிற நல்ல குணங்களின் இடத்தை நிரப்பிக் கொள்ளும்.

“இந்த குணங்கள் எல்லாம் என்னிடம் இல்லை” என்று ஒருவர் கூறுவார். நல்லது, உங்களிடம் அவைகள் இல்லாததினால் மிக்க சந்தோஷம், ஒரு சிலரே இவைகள் அனைத்தையும் பெற்றிருக்கிறார்கள். ஆனால் ஜாக்கிரதையாயிருங்கள். நீங்கள் இயற்கையில் எப்படிப்பட்ட சுபாவ ஆவியை உடையவர்கள் என்பதை நீங்கள் அறியாமலிருக்கலாம். வழி வழியாகப் பெற்று முற்காலத்தில் வளர்த்துக்கொண்ட உங்கள் பழைய சுபாவம் சுதந்தரமாக இராதபடிக்கும் இந்த திசையில் செல்லாதபடிக்கும் நிச்சயித்துக் கொள்ளுங்கள். பாதுகாப்பான ஒரே வழி, தேவனுடைய ஆவியின் காரியங்களை உங்கள் மனதை நிரப்பவும் சோதனைக்கு உட்படாமலும் நாம் ஜாக்கிரதையாக இருந்து தேவனிடம் ஜெபிப்பதே ஆகும்.

அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு நற்குணம், விசவாசம், சாந்தம், இச்சையடக்கம் போன்ற ஆசீர்வதிக்கப்பட்ட ஆவியின் கனிகளை கவனியுங்கள். “இவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை.” இந்த கனிகள் மற்றும் கிருபையில் வளர்ந்து ஜீவிப்பதற்கு “ஆவியின்படி வாழவேண்டும்.” “ஆவியின்படி நடக்க வேண்டும்.” இப்படியாக நாம் நமது ஆத்துமாவை பாதுகாப்பாக வைத்துக் கொள்வது மாத்திரமல்ல, கிறிஸ்துவின் குணலட்சணங்களில் தொடர்ந்து முன்னேறுகிறோம். உண்மையிலேயே நாம் வளரும் போது மட்டுமே நாம் பாதுகாப்பாய் இருக்கிறோம். வளராமல் நின்றுகொண்டே இருப்பதில் எந்தவித பாதுகாப்பும் இல்லை. நாம் வளர்வதை நிறுத்தினால் உடனே நாம் தாழ்வடைய ஆரம்பிப்போம்.

## ஒழுங்குகளின் பலன்கள்

ஆகையால் கிறிஸ்தவ வாழ்க்கை என்பது புது சிருஷ்டிக்கும் மாம்சீக சுபாவம் மற்றும் வெளியிலிருந்து வரும் தாக்குதல்களுக்கும் இடையேயான ஒரு யுத்தமாக, போராட்டமாக இருக்கிறது என்பதை நாம் காண்கிறோம். நாம் கைவிட முடியாத முரண்பாடாக, போராட்டமாக இது இருக்கிறது. நமது பரம அழைப்பின் பரிசு இதைச் சார்ந்திருக்கிறது மட்டுமல்ல, ஜீவனா, மரணமா என்கிற பிரச்சனையும் அதில் இருக்கிறது! இந்த சூழ்நிலைகளின்கீழ் வாழ்வது, எப்படி பயபக்தியுடன் கூடிய காரியமாக இருக்கிறது! ஏனெனில் நாம் ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு மணி நேரமும் நியாயத்தின்படி கூண்டுக்கு முன்பாக நிற்கிறோம்! "நாம் மாம்சத்தின்படி பிழைத்தால் நாம் சாவோம்; ஆவியினாலே சரீரத்தின் செய்கைகளை அழித்தால் (திருப்திபடுத்த மறுத்து, மரணத்தின்போக்கால்) பிழைப்பீர்கள்." தேவனுடைய பிள்ளைகள் அனைவரும் இப்படி ஜீவிப்பார்கள். ஏனெனில், அப்போஸ்தலர் பவுல் கூறுகிறதாவது: "மேலும், எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள்." (ரோமர் 8:14)

தேவனுடைய பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை நாம் வேண்டுமென்றே மறுத்தால், பிள்ளைகள் என்கிற, ஆசீர்வாதமான உறவை நாம் இழந்துவிடுவோம். நாம் அக்கறையின்றி இந்த வழி நடத்துதலை நாம் அவமதித்தால் அந்த உறவை நாம் அபாயத்திற்கு உள்ளாக்குகிறோம். நாம் பிள்ளைகளாக இருப்பதால் நம்மை திருத்தவும், ஒழுங்குபடுத்தவும் நாம் தண்டனைகளைப் பெறுவோம். ஆனால் இப்படிப்பட்ட அடக்குகிற கைக்கு நாம் நன்றியுள்ளவர்களாயிருக்க வேண்டும். இந்த சரிபடுத்தும் கோல் நமக்கு தேவையாய் இருந்தால் அதை நாம் குறைவாக பெறும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். "நம்மைநாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்." (1 கொரிந்தியர் 11:31) பழைய சித்தம் மற்றும் மாம்சத்தின் எழும்புதலுக்கு எதிராக நாம் ஜாக்கிரதையுடன் ஜெபித்தாலும், சந்தேகத்திற்கு இடமில்லாமல் நாம் பல தவறுகளை செய்வோம். அப்பொழுது சில தண்டனைகளின் அனுபவம் தேவைப்படுகிறது. ஏனெனில், "தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ?" (எபிரேயர் 12:5-12)

பிறகு நாம், "என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவர் கடிந்து கொள்ளப்படும்போது சோர்ந்து போகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்பு கூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து தாம் சேர்த்துக் கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என்ற புத்திமதியை ஞாபகத்தில் வைப்போமாக. (எபிரேயர் 12:5,6) நமக்கு முன்னால் இருக்கிற கஷ்டமான ஓட்டத்தில், நம்மை சுற்றியிருக்கிற அனைத்து ஆபத்தின் காட்சியிலும், நமது கால்களுக்கு படுகுழிகள் வைக்கப்பட்டுள்ளதிலும், நமது சொந்த உதவியற்ற முயற்சிகளின் பலவீனத்திலும், தம்மிடத்தில் பரிசுத்த ஆவியை கேட்கிறவர்களுக்கு அதைக் கொடுக்கிற பரலோகத்தில் இருக்கிற நமது பிதாவின் வாக்குத்தத்தம் எவ்வளவு ஆசீர்வாதமாக இருக்கிறது! நாம் மாம்சீக ஆசைகளினால் நிறையப்படாமல் பரிசுத்த ஆவியினால் நிறைந்திருந்தால், நாம் பிழைக்கும்படியாக மாம்சத்தின் கிரியைகளை நாம் அழிக்கக்கூடியவர்களாக இருப்போம் என்று உறுதிமொழி எவ்வளவு மதிப்புள்ளதாக இருக்கிறது! ஊக்கத்துடன் விழித்திருத்தலும் எல்லா கிருபைகளுக்கும் ஊற்றாயிருக்கிறவரிடத்தில் மிகவும் நெருங்கி வாழ்வதும் இடைவிடாமல் ஜெபிப்பதும் எவ்வளவு அவசியமானது!

சில சமயங்களில் நாம் இடது பக்கம் செல்வதா அல்லது வலதுபக்கம் செல்வதா என்பதை அறியாமலும், எதில் நடப்பது என்று அறியாமலும் இருக்கும்பொழுது, "நாம் கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார்," "உன் வழிகளிளெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்" என்கிற தெய்வீக உறுதிமொழிகளை நாம் ஞாபகத்தில் வைத்து நமது இருதயத்தை கர்த்தரிடத்தில் உயர்த்துவோமாக! (சங்கீதம் 37:4,5; நீதிமொழிகள் 3:6) இப்படியாக அவரது பிரியமான குரல் ஆறுதலை, பலத்தை, ஓய்வை, வழியில் இருக்கிற அனைத்து திகைப்பு மற்றும் கவலைகளின் மத்தியில் கொண்டு வரும். "இந்த பிரமாணத்தின்படி நடந்து வருகிறவர்கள் எவர்களோ, அவர்களுக்கும் தேவனுடைய இஸ்ரயேலருக்கும் சமாதானமும் இரக்கமும் உண்டாயிருப்பதாக!" (கலாத்தியர் 6:16)